# சிதம்பரம் நகராட்சி

**2025ஆம் ஆண்டு மார்கழி திங்கள் 14 ஆம் நாள் 29.12.2025ந்தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**மன்றகூட்டப்பொருள்**

**1)** நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் அக்டோபர் மற்றும் நவம்பர் 2025 மாதம் நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** வடகிழக்கு பருவமழை 2025ல் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட சாலைகள் அனைத்தும் ஆங்காங்கே சேதமடைந்து காணப்படுகின்றது. மேலும் உலக பிரசித்து பெற்ற ஸ்ரீ நடராஜர் ஆலய மார்கழி மாத ஆருத்ரா தரிசனம் நடைபெற உள்ளதால், சாலைகளை மேம்படுத்துவது அவசியமாக உள்ளது. இதனை சீரமைப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் SOP-ன்படி சாலை சீரமைப்பு பணி மேற்கொள்ள ரூ.1250/- sq.m வீதம் ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

**3)** சிதம்பரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, (தமிழ்நாடு சட்டம் 9/1999) ன்கீழ் இந்நகராட்சியில் மாற்று திறனாளிகள் நகர மன்ற உறுப்பினராக நியமனம் செய்தல் தொடர்பான விண்ணப்பங்கள் 17.07.2025 முதல் 31.07.2025 அன்று மாலை 3.00 மணிவரை பெறப்பட்டு கடலூர் மாவட்டத்தில் நகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு சிதம்பரம் நகராட்சிக்கு திரு.கி.குருமூர்த்தி த/பெ கிருஷ்ணமூர்த்தி என்பவரை மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித நாள் 24.11.2025 ன்படி நியமன உறுப்பினரை 26.11.2025 அன்று பதவி பிரமாணம் செய்யப்பட்டது என்ற விபரத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: பதிவு செய்யலாம்.

**4)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 324, (தேர்தல்), நாள் 17.10.2025-ன்படி நகராட்சி பகுதி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் நகராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக கொண்டு வார்டுகள் கூட்டம் நடைபெறும் வார்டு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டுஅளவிலான சிறப்புக்கூட்டங்களில் விவாதித்து முன்னுரிமை அடிப்படையில் மூன்று கோரிக்கைகள் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும், **வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்கள்** 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. மேற்படி வார்டு சபா சிறப்பு கூட்டத்தில் உடன் நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய 99 விண்ணப்பங்கள்

பெறப்பட்டது. இதில் 79 எண்ணிக்கையிலான விண்ணப்பங்களுக்கு பதில் தயார் செய்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள 20 விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டதில், 12 விண்ணப்பங்களுக்கு திட்ட நிதியின் கீழ் மூடியுடன் கூடிய மழைநீர்வடிகால் அமைத்தல் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான ரூ.27.00 கோடிக்கு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி, பொதுமக்களின் நலன் கருதி **வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் பெறப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள** கீழ்கண்டுள்ள பணிகளுக்கு ஏதேனும் ஒரு திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்ய, திட்டப் பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| SL.NO | NAME OF THE WORK | Length M | ESTIMATE AMOUNT ( in lakhs) |
|---|---|---|---|
| 1 | Construction of Storm water drain with cover slab at Periyakajiyar Street in Chidambaram Municipality | 247 | 24.00 |
| SL.NO | NAME OF THE WORK | Length M | ESTIMATE AMOUNT ( in lakhs) |
| 2 | Construction of Storm water drain with cover slab at Meenavar colony Main Road (From Muthumanikam street in Chidambaram Municipality | 144 | 15.00 |
| 3 | Construction of Storm water drain with cover slab at North main road in Chidambaram Municipality | 300 | 30.00 |
| 4 | Construction of Storm water drain with cover slab at VGP Street towards Gandhi statue in Chidambaram Municipality | 200 | 31.00 |
| 5 | Construction of Storm water drain with cover slab at Kasimadam street (SP Koil st to Pilliyarkoil) (S to N) in Chidambaram Municipality | 197 | 20.00 |
| 6 | Construction of Storm water drain with cover slab at Perambalam Street (E To W) in Chidambaram Municipality | 76 | 6.30 |
| 7 | Construction of Storm water drain with cover slab at Elliammankoilmadavilagan street. (E To W) in Chidambaram Municipality | 132 | 13.50 |
| 8 | Construction of Storm water drain with cover slab at Kanagasabai Nagar 3rd Main Road ( UGD Pump House Road) (N to S ) in Chidambaram Municipality | 315 | 31.00 |
| 9 | Construction of Storm water drain with cover slab at Sathiya Nagar (E toW ) in Chidambaram Municipality | 141 | 9.80 |
| 10 | Construction of Storm water drain with cover slab at Ellaiamman Koil Street ( E To W ) in Chidambaram Municipality | 327 | 30.00 |
| 11 | Construction of Storm water drain with cover slab at Ambedkar Nagar to Meenavar colony Junction in Chidambaram Municipality | 83 | 9.50 |
| 12 | Providing Storm water drain cover slab at Puliyanthoppu, Muthumanikkam Street &Vadukkuvadugastreet in Chidambaram Municipality | 810.50 | 30.50 |
| | **TOTAL** | | **250.60** |

**.அலுவலககுறிப்பு** – மன்றம்அனுமதிக்கலாம்

**5)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 324, (தேர்தல்), நாள் 17.10.2025-ன்படி நகராட்சி பகுதி பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் நகராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக கொண்டு வார்டுகள் கூட்டம் நடைபெறும் வார்டு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்புக்கூட்டங்களில் விவாதித்து முன்னுரிமை அடிப்படையில் மூன்று கோரிக்கைகள் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டது. அதன்

அடிப்படையில், சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும், **வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்கள்** 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகியதேதிகளில் நடத்தப்பட்டது. மேற்படி வார்டு சபாசிறப்பு கூட்டத்தில் உடன் நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய 99 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இதில் 79 எண்ணிக்கையிலான விண்ணப்பங்களுக்கு பதில் தயார் செய்து இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள 20 விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டதில், பொதுநிதியின் கீழ்மேற்கொள்ளப்பட வேண்டிய 8 விண்ணப்பங்களுக்கு குடிநீர் வசதி ,பூங்கா அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள **வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள** கீழ்கண்டுள்ள பணிகளை நகராட்சி நிதி மூலம் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| SL.NO | NAME OF THE WORK | ESTIMATE AMOUNT (in lakhs) |
|---|---|---|
| 1 | Repair & Maintenance of Municipal Toilet at Thirowpathiammankoil street in Chidambaram Municipality | 1.00 |
| 2 | Providing Storm water drain cover slab at Kathapillai lane in Chidambaram Municipality | 2.50 |
| SL.NO | NAME OF THE WORK | ESTIMATE AMOUNT (in lakhs) |
| 3 | Providing mini power pump at East sannathi in Chidambaram Municipality | 2.30 |
| 4 | Construction of Retaining wall at Kanagasabai nagar 10th Cross street in chidambaram Municipality | 4.40 |
| 5 | Repair and Maintenance of Ration shop at Kanagasabai nagar in Chidambaram Municipality | 1.80 |
| 6 | Providing patch work at Municipal areas in Chidambaram Municipality | 9.00 |
| 7 | Providing road side park at Guru street (Near oriental school) in chidambaram Municipality | 1.00 |
| 8 | Providing road side park at Kunjiramoorthyvinayagarkoilstreet (Panneerselvam street) in chidambaram Municipality | 2.00 |
| | **TOTAL** | **24.00** |

**.அலுவலககுறிப்பு** – மன்றம்அனுமதிக்கலாம்

**6)** திரு.சரண்ராஜ், த.பெ.ரங்கராஜன், நெ.9 கொத்தங்குடி தெரு, சிதம்பரம் என்பவர் சொத்துஉரிமை குறித்து ஏற்பட்ட பிரச்சனை காரணமாக 31 பிரதிவாதிகளை கொண்ட தொடர்ந்த OS 376/2000 நாள்.04.12.2025ற்கு 05.03.2021 ஏற்பட்ட Ex-Party Degree ஐ Setaside செய்துக்கொண்டு அசல் வழக்கை மீண்டும் எடுத்துக்கொள்ள கொண்டுவரப்பட்ட வழக்கில் நகராட்சி ஆணையர் 26வது பிரதிவாதியாகும். இவ்வழக்கு 04.12.2025ல் விசாரணைக்கு வருவதாக சம்மன் வரப்பட்டது. 04.12.2025ல் இவ்வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி, நகராட்சி வழக்கறிஞர் மற்றும் அரசு வழக்கறிஞர் திரு.இளங்கோவன் வாயிலாக வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டதற்கு அனுமதியும், மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்திட நகராட்சி வழக்கறிஞருக்கு அனுமதியும், வழக்கு செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டி

**அலுவலக குறிப்பு:** OS 376/2000 மேண்மை மிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரம் அசல் வழக்கு எண்.376/2000 05.03.2021ல் பகரப்பட்ட Ex-Party Degree ஐ Setaside செய்துக்கொண்டு அசல் வழக்கை மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டி மனு செய்துள்ளது 04.12.2025 ல் விசாரணை சம்மன் வரப்பெற்றுள்ளதால் நகராட்சி வழக்கறிஞர் திரு.இளங்கோவன் கொண்டு வழக்கு நடத்திட அனுதியும், அதற்குரிய செலவினம் ரூ.12,000/- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4739/2025/எப்1**

**7)** சிதம்பரம் சட்டமன்ற தேர்தல் 2026க்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பணிக்கு விளம்பரம் பதாகைகள், கணினிகள் வாடகை இணைய வசதி, கணினிகளுக்கு இளைய வசதி வழங்க நெட் ஓர்க் வசதி, புள்ளி விவர குறிப்பாளர்கள் ITK தன்னார்வலர்கள் மற்றும் சிறப்பு தீவிர பணியினை விரைந்து முடிக்க கைப்பேசி மூலம் கணக்கெடுப்பு படிவத்தினை கணினியை ஏற்றம் செய்ய தன்னார்வலர்களை கொண்டு செய்யவும் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றுக்கு ஆகும் செலவினம் ரூ.1,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரிய முன் அனுமதி பெறப்பட்டு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**8)** இந்நகராட்சிக்குட்பட்ட கிழக்கு தேரடி வீதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு ஏலம் விடுவதற்க்கு பொது முன்ஏலம் மற்றும் பொது முன்ஒப்பந்தப்புள்ளி அறிக்கைனை விளம்பரம் செய்ததற்கான செலவின தொகை ரூ 29,925/-னை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1619/2025/அ1

**9)** சிதம்பரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த மையங்களின் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின்படி 9 நகராட்சிக்கு சொந்தமான தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 697 மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட இரண்டு பள்ளிகளில் 36 மாணவர்களுக்கும் ஆக கூடுதல் 733 மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு ஸ்ரீ அங்கு மீனாட்சி பவன் உணவகத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, 25.08.2023 அன்று முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு, உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஆகஸ்ட் 2025 ஒப்பந்தகாலம் முடிவுற்ற நிலையில் மாணவ/மாணவிகளின் உணவு வழங்கும் திட்டமாக உள்ளதால் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.10.2025 முதல் 31.01.2026 வரை காலநீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பள்ளி மாணவ / மாணவிகளுக்கு உணவு வழங்கும் திட்டமாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்றுமாத காலத்திற்கு பணி மேற்கொண்டு தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**10)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீசிவகாம சுந்தரி ஸமேத ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்தி திருக்கோவிலின் 2026-ஆம் ஆண்டு மார்கழி மாத ஆருத்ரா தரிசன மஹோத்ஸவத்தை முன்னிட்டு வழக்கம் போல் மார்கழி மாத தேர் திருவிழாவிலிருந்து 30 நாட்களுக்கு கீழரத வீதியில் கிழக்கு சன்னதிக்கு தென்புற சாலையில் இருபுறமும் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம் திருவிழா கடைகள் அமைக்கவும், நகராட்சியால் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு குத்தகை ஏலம் எடுப்பவர்களின் சொந்த செலவிலும், பொறுப்பிலும் தற்காலிக தகர கொட்டாய்கள் அமைத்து கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதற்கான விளம்பர செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**11)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான லால்புரம் கிராமத்தில் புல்பண்ணை என்று அழைக்கப்பட்ட தற்போது STP, புதிய பேருந்து நிலையம், மலைவாழ் மக்கள் குடியிருப்புகள், குளம், லால்புரம் சுடுகாடு மற்றும் சில குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் உள்ள சுமார் 55 ஏக்கர் பரப்பளவு இடத்தில் சுற்றிலும் கம்பி மற்றும் முள் வேலி அமைக்கப்பட்டு நகராட்சி சுவாதினத்தில் 70 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள இடத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மேலாண்மை இயக்குநரின் கடிதம் எண்.1992/எல், எ1/2025 நாள்.21.02.2025 கோரியதற்காக மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண்.வி2/3050517/2025, நாள்.24.10.2025 மற்றும் 28.11.2025 ஆபரணத் தொழில்பேட்டை (Imitation Jewellery) அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதனை நிறைவேற்றம் செய்வதற்கு ஏதுவாக லால்புரம் கிராமம் புல எண்.196ன் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் என நகரளவு ஆவண பதிவுள்ள மொத்த விஸ்தீரணம் 2.54.00 ஹெக்டேர் இடத்தில் 0.86.0 ஏர்ஸ் சிட்கோ நிறுவனத்திற்கு தேவைப்படுவதாகவும், அதற்கு நகராட்சி நிர்வாகத்திடம் தடையின்மை சான்று வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் கோரியதற்கு, நகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை விலைக்கு சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டு மதிப்பு எது அதிகமோ அதன் அடிப்படையிலையே வழங்க இயலும் என அனுப்பப்பட்ட பதில் அடிப்படையில் மேற்படி நிலத்திற்கு தேவைப்படும் புல எண் 196 ல் 0.86.0 ஹெக்டேர் நிலத்திற்கு நிலம் மதிப்பு ரூ.3,84,42,000/- என நிர்ணயிக்கப்படுகிறது என கடிதம் வரப்பெற்றுள்ளது. சிட்கோ நிறுவனத்திற்கு தேவைப்படும் புல எண் 196 ல் 0.86.0 ஹெக்டேர் நிலத்தினை அரசு அனுமதி பெற்று ரூ.3,84,42,000/-ற்கு விலைக்கு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டி.

**அலுவலக குறிப்பு:**

சிட்கோ தொழில்பேட்டை அமைக்க லால்புரம் கிராமம் புல எண்.196ன் மொத்த விஸ்தீரணம் 2.54.00 ஹெக்டேர் இடத்தில் மட்டும் 0.86.0 ஏர்ஸ் மதிப்பு ரூ.3,84,42,000/-ன் அடிப்படையில் சிட்கோ நிறுவனத்திற்கு தடையின்மைசான்று வழங்கிட அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அனுமதி பெற்று விலைக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4409/2025/எப்1**

**12)** சிதம்பரம் நகராட்சி பொறியியல் பிரிவில் தற்போது மின்பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்பணி பார்க்கும் திரு.P.மோகன் என்பவர் தான் பணி பார்த்த 1985-1987 மற்றும் அதன்பின் ஒப்பந்தப்பணியாளராக பணிபுரிந்த காலத்தினை அரசாணை எண்.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.02.2006ன் படி முறைப்படுத்த வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு 23835/2014 என தொடர்ந்த வழக்கு எண். WP No.23835 /2014 and MP No.1/2014 வழக்கிற்கு 17.02.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் மேல் வழக்கிற்கு மேல்முறையீடு மனு நீதிமன்றத்தில் பதிவு செய்திட வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் வழக்கு நடத்திட அனுமதியும் அதற்குரிய செலவினம் ரூ.30,000/- மன்றம் அனுமதி வேண்டி.

**அலுவலக குறிப்பு:** WP No.23835/2014 and MP No.1/201 வழக்கினை மேல்முறையீடு செய்து வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் வழக்கு நடத்திட மன்றம் அனுமதியும், வழக்கு செலவு கட்டணம் ரூ.30,000/- வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

நீதிமன்ற நடவடிக்கை என்பவதால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3626/2014/இ1**

**13)** சிதம்பரம் நகராட்சியில் அமைக்கப்பட உள்ள புதிய பேருந்து நிலையத்தை 45A தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச்சாலையுடன் இணைத்திட சிதம்பரம் வட்டம் பாலுத்தாங்கரை கிராம புல எண்கள் 17/5B1,44/4A மற்றும் 45/2A ஆகியவற்றில் 0.24.37 ஹெக்டேர் தனியார் நிலங்கள் தேவைப்படுதலை நேரடி பேச்சுவார்த்தை மற்றும் நிலஎடுப்பு சட்டத்தின் மூலம் நிலங்களை கையகப்படுத்துதல் 11(1) கீழான முதல்நிலை அறிவிக்கை கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு. வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2025-26ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | நாளிதழ் விபரம் | விளம்பரம் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினகரன் | 16.10.2025 | 270096 |
| 2 | தினமலர் (தமிழ்) | 16.10.2025 | 30080 |
| | | GST 5 % | 15008.50 |
| | | கூடுதல் | **315185.00** |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**14)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கள்ளுகடை தெரு, எம்.ஜி.ஆர். நகர் மெயின்ரோடு மற்றும் தில்லைகாளியம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ரூ.87.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒப்பந்தப்புள்ளி கோரி தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் Vipras adz, சென்னை என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நதி 2025-26ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பரநாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | THE NEW INDIAN EXPRESS | 11.12.2025 | 48750 |
| 2 | தினகரன் | 11.12.2025 | 75050 |
| | | GST 5 % | 6190.00 |
| | | கூடுதல் | 129990.00 |

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**15)** நமக்கு நாமே திட்டம் 2025-26-ன்கீழ் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட ஆயிகுளத்தில் Stainless Steel hand rails அமைக்கும் பணி பணியினை மேற்கொள்ள 10.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 12.12.2025 அன்று M/s. PRIME FABRICATION என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்

**16)** நமக்கு நாமே திட்டம் 2025-26-ன்கீழ் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட காரைக்குட்டை குளத்தில் Stainless Steel hand rails அமைக்கும் பணி பணியினை மேற்கொள்ள 10.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 12.12.2025 அன்று M/s. PRIME FABRICATION என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்

**17)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட சொந்தமான சம்பந்தகார தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி நேராய்வு செய்யப்பட்டதில் கட்டிடம் முழுவதும் ஆங்காங்கே சிதலமடைந்து மழைநீர் கசிவு ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தில், Weathering Tiles முழுவதும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி கட்டிடத்தின் உள்பகுதியில் வழிந்தோடி தரைதளம் பெயர்ந்து விடுகிறது. இதனால் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலை ஏற்படுவதாகவும், மேற்படி கட்டிடத்தை சீரமைத்து தருமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர்

மற்றும் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் கோரியதிற்கிணங்கயும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி அறிவுறுத்தலின்படியும் மேற்படி கட்டிடத்தை சீரமைப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.20.00 ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**18)** கடலூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிதம்பரம் நகராட்சியில் நடைபெற்று முடிவுற்ற புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ஆகிய திட்டப்பணிகளை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்ததை கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2025-26-ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **நாளிதழ் விபரம்** | **விளம்பரம் நாள்** | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| *1* | மாலை மலர் | 22.02.2025 | 12000.00 |
| | | GST 5 % | 600.00 |
| | | கூடுதல் | **12600.00** |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**19)** சிதம்பரம் நகராட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற மற்றும் முடிவு பணிகளை கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2025-26-ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **நாளிதழ் விபரம்** | **விளம்பரம் நாள்** | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| *1* | தினமலர் | 01.10.2025 | 20000.00 |
| | | GST 5 % | 1000.00 |
| | | கூடுதல் | **21000.00** |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**20)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட, 10 நகராட்சி பள்ளிகளுக்கு (டிசம்பர்-2024 முதல் மார்ச்-2025 வரை) மாணவ/மாணவிகளுக்கு வாசிப்பு திறனை மேம்படுத்திட நாள்தோறும் தினசரி நாளிதழ் கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2025-26-ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **நாளிதழ் விபரம்** | **விளம்பரம் நாள்** | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| *1* | தினகரன் | 31.03.2025 | 5920.00 |
| | | கூடுதல் | **5920.00** |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**21)** சிதம்பரம் நகராட்சியில் நான்கு ஆண்டுகளில் முடிவுற்ற மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2025-26-ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **நாளிதழ் விபரம்** | **விளம்பரம் நாள்** | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| *1* | தினதந்தி | 20.10.2025 | 21200.00 |
| | | GST 5 % | 1060.00 |
| | | **கூடுதல்** | **22260.00** |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட குடும்ப அட்டைதார்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கியதை கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2025-26-ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | நாளிதழ் விபரம் | விளம்பரம் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| *1* | மாலை மலர் | 13.01.2025 | 6667.00 |
| | | GST 5 % | 333.00 |
| | | கூடுதல் | *7000.00* |

**அலுவலககுறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**23)** சிதம்பரம் நகராட்சி இந்திரா நகர் இரயிலடி தெருவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலுக்கு மேல் மூடி மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்க, மேற்படி தெருவில் மழைநீர் வடிகாலுக்கு மேல் மூடி மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,50,000/- ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

**24)** சிதம்பரம் நகராட்சியில் அவ்வப்போது காணொலி மூலம் நடத்தபெறும் ஆய்வு கூட்டம் மற்றும் பயிற்சியில் கலந்துகொள்ள ஏதுவாகவும் மற்றும் UTIS தொடர்பான பணிகள் மற்றும் கணினி சார்ந்த பணிகளை மேற்கொள்ளவும், ஆணையர், மேலாளர், கணக்கர், நகராட்சி பொறியாளர், உதவிபொறியாளர்கள், பட வரைவாளர், உதவி வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வாளர்கள், சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியவர்களுக்கு 10 எண்ணிகையிலான ALL-IN-ONE Computer, 2 Printer மற்றும் 3 எண்ணிக்கை Monitor வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 9,50,000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**:மன்றம் அனுமதிக்கலாம்

**25)** சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33-வார்டுகளில் உள்ள பகுதிகளில் மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (SUIDF) கடன் திட்டத்தில் ரூ.304.47 இலட்சத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 2225 தெருமின்விளக்குகளை LED தெரு மின் விளக்குகளாக மாற்றியமைத்து பத்தாண்டுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு M/s HARIWAY LINES, புதுக்கோட்டை என்ற நிறுவனத்திற்கு 09.02.2023-ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் 2225 எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஓராண்டு முடிந்த நிலையில் கடந்த 18.06.2025 மூன்றாம் தரப்பு ஆய்வறிக்கை மற்றும் Substantial Report ஏப்ரல்-2025ல் பெறப்பட்டுள்ளது. மேலும் பணிமுடிவறிக்கைகான இறுதி ஒப்புதல் தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 அவர்களிடம் பெறப்பட்டுள்ளது.

தற்போது, மேற்படி இரண்டு திட்டத்தில் அமைக்கப்பட்ட LED தெருமின் விளக்குகளை M/s HARIWAY LINES, புதுக்கோட்டை என்ற நிறுவனம் மார்ச்-2025 மாதம் முதல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்வதற்கு ஒராண்டுக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.24.00 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சிதம்பரம் நகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள், விடுபட்டுள்ள பகுதிகள் 15-வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் 159 எண்ணிக்கை 20 W LED தெருவிளக்குள் மற்றும் SFC Incentive

Fund & 15-வது நிதிக்குழு மானிய நிதியின்கீழ் 213 எண்ணிக்கை அலங்கார மின்கம்பங்களுடன் கூடிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தெருமின் விளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை (Operation and Maintenance O&M) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.24.00 இலட்சம் (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி, நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தெருமின் விளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை ஒப்பந்ததாரரின் செயல்திறன் அடிப்படையில் நகர்மன்ற ஒப்புதல் பெற்று உரிமத்தை புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 2931/2021/இ1)

**26)** சிதம்பரம் நகராட்சியில் இயங்கி வரும் TN 91 F 7705 பொலிரோ ஈப்பு வாகனத்தில் வாகனத்தில் பழுது ஏற்பட்டு இயக்குவதற்கு கடினமான நிலையில் உள்ளது. எனவே, மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை அகற்றிட 15-வது சூழல் முறை பராமரிப்பு பணியினை M/s. SCHANGALAYA MOTOR, PONDICHERY என்று நிறுவனத்திற்கு 15.12.2025 அன்று பணி உத்தரவு வழங்கி, பணி மேற்கொண்டு ரூ.52977/-ம் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1) மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டு தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**27)** சிதம்பரம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-25ன்கீழ் ரூ. 447.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிறுத்தம் பணி நடைபெற்று வருகிறது. பணி முடிவுபெற்றவுடன் நகராட்சிக்கு வருவாய் ஈட்டிடும் வகையில் பேருந்து நிலையத்தின் வடபுறம் 40 எண்ணிக்கையில் புதியதாக கடைகள் கட்டுவதற்கு ரூ. 160.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி செலவினத்தொகையினை நகராட்சியின் மூலம் கடைகளை முன்ஏலம் விடப்பட்டு அதில் வரும் தொகையிலிருந்து கடைகள் கட்டுவதற்கும் மீதமுள்ள தொகைக்கு வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம்

**28)** சிதம்பரம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-25ன்கீழ் ரூ. 447.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிறுத்தம் பணி நடைபெற்று வருகிறது. பணி முடிவுபெற்றவுடன் நகராட்சிக்கு வருவாய் ஈட்டிடும் வகையில் பேருந்து நிலையத்தின் தென்புறம் 40 எண்ணிக்கையில் புதியதாக கடைகள் கட்டுவதற்கு ரூ. 160.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி செலவினத்தொகையினை நகராட்சியின் மூலம் கடைகளை முன்ஏலம் விடப்பட்டு அதில் வரும் தொகையிலிருந்து கடைகள் கட்டுவதற்கும் மீதமுள்ள தொகைக்கு வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம்

**29)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நோய்பரப்பிகளால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள 50 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) கங்கைமகளிர் சுய உதவிக்குழு, சிதம்பரம் மூலம் மாவட்ட ஆட்சியர் தினக்கூலி அடிப்படையில் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட கங்கை மகளிர் சுயஉதவிகுழு பணிக் காலம் 31.12.2025- ல் முடிவடைகிறது. தற்போது மழைக்காலமாக உள்ளதாலும் ஆங்காங்கே காய்ச்சல் பரவி வருவதாலும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட கங்கை மகளிர் சுய உதவிக்குழுவின், பணிக்காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.01.2026 முதல் 31.03.2026 வரை பணி நீட்டிப்பு செய்வதற்கு பட்டியலின்படியான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்: 2481/2019/எச்1)**

**30)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN91 M2553 ஸ்கிட் லோடர் JCB வாகனத்திற்கு காப்பீட்டு தொகை செலுத்தும் அவசர அவசியிம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது) 2022 பிரிவு 57(7)ன்கீழான நடவடிக்கையின்படி பொது நிதியிலிருந்து செலவினம் ரூ.23096/- மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 4149/2025/எச்1)**

**31)** மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்து 26.08.2025 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்ததை முன்னிட்டு நகராட்சிக்குட்பட்ட 10 அரசு உதவிபெறும் பள்ளிகளில் பேனர்கள், சாமியானபந்தல், சேர்கள் உள்ளிட்ட துவக்க விழா ஏற்பாடுகளுக்காக அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது) 2022 பிரிவு 57 (7)ன்கீழ் நடவடிக்கை மேற்கொண்ட வகையிலான செலவினம் ரூ.172600/- நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோட்பு எண். 2909/2025/எச்1)**

**32)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பொருட்டு நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளிச்சிங் பவுடர் உள்ளிட்ட கிருமி நாசினிகள் இருப்பு குறைவாக உள்ளதால் எதிர்வரும் ஆருத்ரா தரிசனம், புத்தாண்டு, பொங்கல் பண்டிகைகள் ஆகியவற்றிற்கும் தொடர் பயன்பாட்டிற்கும் தேவைப்படும் 10 டன் நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் 2 டன் பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வாங்கிக்கொள்ளவும் அதற்கான செலவினம் தோராயமாக ரூ.2.50/-இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** **கோட்பு எண். /2025/எச்1**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற் கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**33)** சிதம்பரம் நகராட்சியில் I&A Fund 2022-23ன் கீழ் லால்புரம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 40% பணி முடிக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் மூலம் குறிப்பு வழங்கி கடைகள் முன் ஏலம் விடுவதற்கு பொது ஏல நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். அதன்படி 53 எண்ணிக்கைகான கடைகள் முன் ஏலம்(Pre-Action) விடப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ எ ண் | கடைகள் முகம் | சதுர அடி | கடைகள் விபரம் | கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய டேவனித் (பொறுப்புத்) தொகை (கேட்பு வரைவோலையாக DD மட்டும்) ரூ. | கடை ஒன்றுக்கு அளிக்க வேண்டிய வங்கி உத்தரவாத சான்று தொகை ரூ. | வங்கி உத்தரவாத சான்று அளிக்கவில்லை எனில் கூடுதல் (பொறுப்பு) வைப்புத் தொகை கேட்பு வரைவோலையாக DD மட்டும் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு | 153.19 | Arch Building 12 கடைகள் | 3,00,000 | 3,00,000 | 1,00,000 |
| 2 | வடக்கு | 147.81 | Arch Building 11 கடைகள் | 3,00,000 | 3,00,000 | 1,00,000 |
| 3 | தெற்கு | 134.38 | Arch Building 7 கடைகள் | 3,00,000 | 3,00,000 | 1,00,000 |
